# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள், புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**<u>நிகழ்ச்சி நிரல்</u>**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டத்தினை **அம்ரூத் பகுதி 2 திட்டம் (Phase-2)** திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும், ஏற்கனவே பஞ்சப்பூரில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தி பயன்படுத்தும் வகையிலும் அம்ரூத் திட்டத்தின் கீழ், 2020 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ரூ.344.00 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசு ஆணை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC.2) நாள்.25.10.2017ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி அரசாணையில் கடன் மற்றும் மான்யம் பெறுதல் சார்ந்த திருத்தங்கள் செய்து ஆசிய வளர்ச்சி வங்கி நிதி (ADB) உதவியின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற முதன்மை முதலீட்டு திட்டம் (TNUFIP) புதைவடிகால் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ.377.29 கோடி திருத்திய நிர்வாக அனுமதிக்கான அரசாணை (நிலை) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.02.2019ன் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளதை தனி அலுவலர் அவர்களின் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

அரசு ஆணைகளை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ7/1228/2015(மையம்)**

**தீர்மானம் எண்.485 (பொருள்—1) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்யில் விடுப்பட்ட பகுதிகளுக்கு புதைவடிகால் திட்டம் ( Phase II) அடல் மிஷன் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றம் திட்டத்தின் (AMRUT) திட்ட நெறிமுறைகளின் படி செயல் படுத்திடவும், தலைவர் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் சென்னை அவர்களின் கடிதம் எண்.TUFIDCO/Trichy/UGSS/ 1962/AM(M)/2017 Date.27.06.2017ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப் பாடுகளின் படி, புதைவடிகால் திட்டம் செயல்படுத்த நிதியாரங்களின் படி தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண்.185 நாள்.30.06.2017ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

மேற்கண்ட திட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், சென்னை அவர்களின் மின்னஞ்சல் வழியாக 05.07.2017ம் தேதி வரப்பெற்ற கடிதத்தில் மாநகராட்சி பங்களிப்பு தொகையில் அடங்கும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் திருத்தம் செய்தும், அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அம்ருத் திட்ட வழிகாட்டுதல்களின்படி பணிகளை மேற்கொள்ளவும், தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண். 219 நாள். 31.07.2017ல் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில், புதைவடிகால் திட்ட பணியில் நிதி ஆதாரங்களில் நிர்வாக காரணங்களை முன்னிட்டு மாநகராட்சி பங்களிப்பு தொகையில் அடங்கும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் திருத்தம் செய்து அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள். 28.02.2019ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் நிதி ஆதாரம் பின்வருமாறு

**ரூ.கோடியில்**

| Sl. No | Name of the ULB | Project Cost as per AMRUT | Project Cost as per ADB | Funding under ADB Assisted TNUFIP | | Funding Under AMRUT | | UILB Contributions (5) | Total Cost Rs (1+2+3+4+5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Loan from TNUDF (1) | Grant from PSGF (2) | GOI (3) | GOTn (4) | | |
| 1 | திருச்சிராப்பள்ளி புதை வடிகால் திட்டம் (பகுதி 2) | 344.00 | 377.29 | 37.84 | 55.54 | 172.00 | 68.80 | 43.11 | 377.29 |

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், சென்னை அவர்களின் கடிதம் எண். TNUDF/Projects/TNUFIP/Trichy UGSS – Phase II March 1, 2019ல் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க நிபந்தனைகளின் படி புதைவடிகால் சேவைக் கட்டணத்தை கீழ்க்கண்ட விவரப்படி திருத்தியமைப்பதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| சொத்து வரி அடிப்படையில் நிர்ணயம் (சதுரஅடியில்) | தற்பொழுது நிர்ணயம் செய்யப்பட முன் வைப்புத்தொகை ரூபாயில் | | | தற்பொழுது நிர்ணயம் செய்யப்பட உள்ள சேவைக் கட்டணம் (ரூபாய்/ மாதம் ஒள்றக்கு) | | |
|---|---|---|---|---|---|---|
| | வீட்டு பயனுக்கு | வீட்டில்லாத பயனுக்கு | தொழிற்சாலை களுக்கு | வீட்டு பயனுக்கு | வீட்டில்லாத பயனுக்கு | தொழிற்சாலை களுக்கு |
| <500 | 7500 | 15000 | 15000 | 100 | 300 | 300 |
| 501-1200 | 10000 | 20000 | 20000 | 140 | 420 | 420 |
| 1201-2400 | 12500 | 25000 | 25000 | 180 | 540 | 540 |
| 2401* | 15000 | 30000 | 30000 | 220 | 660 | 660 |
| wt.average | 9765 | 19443 | 21437 | 136 | 407 | 454 |
| 2401* சதுர அடிக்கு மேல் உள்ள பிளின்த் பகுதிக்கான வைப்புத் தொகை மற்றும் கட்டணங்கள் அஸ்திவாரப் பகுதியின் அதிகரிப்புக்கு ஏற்ப விகிதச்சார அடிப்படையில் அதிகரிக்கப்படும் | | | | | | |

**அலுவலகக்குறிப்பு.**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், சென்னை அவர்களது கடிதம் RocNo. TNUDF/Projects/ TNUFIP/Trichy UGSS – Phase II நாள்.01.03.2019ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், அம்ருத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்ற திட்ட வழிகாட்டுதல்களின்படி பணிகளை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.
3. இத்திட்டம் மத்திய/ மாநில அரசால் வழங்கப்படும் நிதி ஆதாரங்களின் அடிப்படையிலும், உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்தும் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கலாம்.
4. மேற்படி திட்டம் மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் அனைத்து ஒப்புந்தப் பத்திரத்திலும் மாநகராட்சி ஆணையர் ஒப்பம் செய்வதற்கான முழு உரிமை அளித்துஅனுமதி வழங்கலாம்.

**இ7/1228/2016(மையம்)**

**தீர்மானம் எண்.486 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைக் கோட்டம், வார்டு எண் 44க்கு உட்பட்ட ஏ.எஸ்.ஜி லூர்துசாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையம், புதுக்கோட்டை மார்க்கம் செல்லும் பேருந்துகள் நிற்கும் பகுதியின் அருகில் கிராமப்புற விவசாய பெருங்குடி மக்களின் பொருளாதார வாழ்க்கை தர மேம்பாட்டு நலன்கருதி அவர்கள் உற்பத்தி செய்யும் பாலைக் கொண்டு பொதுமக்களுக்கு, பால் பொருட்கள் மற்றும் அதனை சார்ந்த உணவு பொருட்கள் தயாரித்து விற்பனை செய்ய 10”X10” சதுர அளவில் ஆவின் பாலகம் அமைத்து விநியோகம் செய்ய அனுமதி

வழங்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் / பொது மேலாளர் திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., கொட்டப்பட்டு புதுக்கோட்டை ரோடு திருச்சிராப்பள்ளி – 620 023 அவர்களின் ந.க.எண்:2745/ விற்பனை/17-18 நாள்-31.07.2019 கடிதத்தில் கோரப் பட்டுள்ளது.

மேற்கண்ட இடத்திற்கு மாதவாடகை ஒரு சதுர அடிக்கு ரூ23.45/- வீதம் 100 சதுரஅடிக்கு ரூ2,345/- என நிர்ணயம் செய்து மற்றும் சேவை வரியுடன் சேர்த்து வசூலிக்கவும் அரசாணை எண்.92, ந.நி(ம) கு.வ துறை நாள்.03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைக்கு உட்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியுடன் “ மத்திய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் புதுக்கோட்டை மார்க்கம் செல்லும் பேருந்துகள் நிற்கும் பகுதியின் அருகில் 10”X10”=100” சதுரஅடி அளவில் ஆவின் பாலகம் அமைத்து ஆவின்பால் மற்றும் ஆவின் பால் உபபொருட்கள் வைத்து விற்பனை செய்து கொள்ள” நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது அனுமதி பெறுவதற்காக தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாதவாடகை ரூ.2,345/- என நிர்ணயம் செய்து சேவைவரியுடன் சேர்த்து வசூலிக்கவும், அரசாணை எண்.92 ந.நி(ம)கு.வ.துறை நாள்:03.07.2007ன் நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.
2. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மத்திய பேருந்து நிலையம் புதுக்கோட்டை மார்க்கம் செல்லும் பேருந்துகள் நிற்கும் பகுதியின் அருகில் ஆவின் பாலகம் அமைத்து விற்பனை செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அனுமதி பெற்று அனுமதி வழங்கலாம்.

**அ1/7178/2019 (பொன்)**

**தீர்மானம் எண்.487 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டம், வார்டு எண் 63 ஆலத்தூர், தெருவில் 6” விட்டமுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து நீர்மூழ்கி மோட்டார் மூலமாக பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது, தற்சமயம் ஆழ்துளை கிணற்றில் உள்ள நீர்மூழ்கி மோட்டார் பழுதடைந்து பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய முடியாமல் இருந்ததால், இதனை மாற்றி புதிதாக நீர்மூழ்கி மோட்டார் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யவும், மேலும் பொதுத் துறையினரால் பாசன வாய்க்கால் தூர்வாரும் பணி மேற்கொள்ளப் படவுள்ளதால் வாய்காலில் ஓரம் செல்லும் தண்ணீர் PVC குழாய் மாற்றி அமைத்தல், மேலும் நொச்சிவயல்புதூர் பகுதியில் 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட PVC தொட்டிகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு தொகை ரூ.2.20 இலட்சத்தில் திரு. P. வீரமணி, திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவான விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/8245/2019(மையம்)**

**தீர்மானம் எண்.488 (பொருள்–4) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ–அபிசேகபுரம் கோட்டம் எண்.59ல் உறையூர் குழுமணி சாலை காசி விளங்கி பகுதியில் நவீன மீன் மார்கெட் கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று

கொண்டிருந்ததால், மாமன்ற தீர்மானம் எண்.       ன்படி புத்தூர் தினசரி சந்தை (சின்ன மைதானம்) பகுதி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஆறு மாத காலத்திற்கு, முந்தைய உரிமதாரார் திரு. முகமது பிலால் என்பவருக்கு 01.04.2019 முதல் 30.09.2019 வரை குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது.

வருகிற 30.09.2019—ம் தேதியுடன் குத்தகை உரிம காலம் முடிவடைவதால், வார்டு எண்.59ல் உறையூர் குழுமணி சாலை காசிவிளங்கி பகுதியில் நவீன மீன் மார்கெட் கட்டிடம் கட்டும் பணியின் தற்போதைய நிலை குறித்து இளநிலை பொறியாளர் பகுதி IV அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டது. இளநிலை பொறியாளரின் குறிப்பில் குழுமணி சாலை காசிவிளங்கி பகுதி நவீன மீன்மார்கெட் கட்டும் பணியை முடிக்க போதிய கால அவகாசம் தேவைப்படுவதால் 30.12.2019 வரை புத்தூர் சந்தை குத்தகை உரிமத்தினை நீட்டிப்பு செய்ய தெரிவித்துள்ளார்.

வருகிற 30.09.2019 ந் தேதியுடன் குத்தகை உரிமம் காலம் முடிவடைவதால், புதிய நவீன மீன் மார்கெட் கட்டிட பணி நிறைவு பெறாமல் கட்டிடத்தினை முழுமையாக கட்டி முடிக்க கால அவகாசம் கோரியுள்ள நிலையில் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தடுக்கும் பொருட்டு தற்போதைய குத்தகைதாரரின் கடிதத்தினை ஏற்று, சென்ற முறை உரிமம் வழங்கியது போலவே மேற்கண்ட மன்ற தீர்மானத்தின்படி 01.10.2019 முதல் 31.12.2019 வரை உள்ள மூன்று மாத காலத்திற்கு புத்தூர் தினசரி சந்தை கட்டண வசூல் உரிமத்தினை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிடவும், 2018—2019 ஆண்டு குத்தகை தொகை ரூ.38,11,110/—ல் 5% உயர்வு செய்து ரூ.20,00,833/—ஆறுமாத காலத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையிலிருந்து ரூ.10,00,417/—ஐ மூன்று மாத காலத்திற்கு குத்தகை உரிம தொகையாக நிர்ணயம் செய்திடவும், தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

2018—2019 ஆண்டு குத்தகை தொகை ரூ.38,11,110/—ல் 5% உயர்வு செய்து மூன்று மாதகாலத்திற்கு ரூ.10,00,417/—ஐ குத்தகை உரிம தொகையாக நிர்ணயம் செய்து திரு.முகமது பிலால், என்பவருக்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க அனுமதி வழங்கலாம்.

**அ1/2055/19கோ.அபி**

**தீர்மானம் எண்.489 (பொருள்—5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம், வருவாய் பிரிவில் 2018—2019ஆம் ஆண்டுக்கான கேட்பு வசூல் மற்றும் நிலுவைகள் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. தணிக்கைக்கு வரி மற்றும் வரியில்லா இனங்கள் வார்டு எண்.01 முதல் 18 வரை கேட்பு வசூல் மற்றும் நிலுவைகளின் விபரப்பட்டியல் (நடப்பு மற்றும் நிலுவை பட்டியல் தனித்தனியாக) சமர்ப்பிக்க பிரிண்டரில் நகல் எடுக்க வேண்டியுள்ளது.

Line Printer மூலம் நகல் எடுக்க 10x12x1 அளவுள்ள பேப்பர் 20,000 எண்ணிக்கை மற்றும் 15x12x1 அளவுள்ள பேப்பர் 15,000 எண்ணிக்கை வாங்கிகொள்ள அவசர அவசியம் கருதி கீழ் கண்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Sabari Print Forms, No.15, Benwells Road, Williams Road, Contonment, Trichy.1 என்ற விலைப்புள்ளியை ஏற்று 10x12x1 அளவுள்ள பேப்பர் 20,000 எண்ணிக்கை மற்றும் 15x12x1 அளவுள்ள பேப்பர் 15,000 எண்ணிக்கை வாங்கிகொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து Sri Sabari Print Forms, Trichy என்ற நிறுவனத்திற்கு 26.08.2019 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு மேற்படி 10x12x1 அளவுள்ள பேப்பர் 20,000 எண்ணிக்கை மற்றும் 15x12x1 அளவுள்ள பேப்பர் 15,000 எண்ணிக்கை 27.08.2019 அன்று பெறப்பட்டது.

மேற்படி அளவுள்ள பேப்பர்கள் பெறப்பட்டதற்கான செலவுத் தொகை ரூ.46,758/– (GST உள்பட)ஐ Sri Sabari Print Forms, Trichy என்ற நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தனி அலுவலருக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

**2018–2019** ஆம் ஆண்டுக்கான கேட்பு வசூல் மற்றும் நிலுவைகள் தணிக்கை செய்யப்பட்டு வருவதால் தணிக்கைக்கு சொத்துவரி, தொழில்வரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம், புதைவடிகால் சேவை கட்டணம் மற்றும் வரியில்லா இனம் ஆகியவற்றின் நிலுவை மற்றும் நடப்புக்கான கேட்பு, வசூல் மற்றும் நிலுவை (DCB) வார்டு வாரியாக பிரிண்ட் எடுத்து தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி 10x12x1 அளவுள்ள பேப்பர் 20,000 எண்ணிக்கை மற்றும் 15x12x1 அளவுள்ள பேப்பர் 15,000 எண்ணிக்கை Sri Sabari Print Forms, Trichy என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி கொண்டதற்கும் அதற்கான செலவினத் தொகை ரூ.46,758/– (GST உள்பட) ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கலாம்.

**கோப்பு எண்.அ1/3663/2019/ஸ்ரீ**

**தீர்மானம் எண்.490 (பொருள்–6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.17க்குட்பட்ட தேவர் மன்றத்தில் தனியார் மருத்துவமனை மற்றும் அரசு சாராத தனியார் நிறுவனங்களுக்கான டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் 22.07.2019 அன்று நடத்துவதற்கு தேவையான மேடை அலங்காரம், தரை விரிப்பான், விளம்பர பலகை, டேபிள் சேர், LEd புராஜெக்டர் மற்றும் ஜெனரேட்டர் ஆகியவற்றை வாடைக அடிப்படையில் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.65,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டின் விலையை விட 0.07 சதவீதம் குறைவான விலை வீதத்தில், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் திரு.M.பொன்னு சாமி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ7/7972/2019(மையம்)**

**தீர்மானம் எண்.491 (பொருள்– 7) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.17க்குட்பட்ட தேவர் மன்றத்தில் டெங்கு காய்ச்சல் மற்றும் மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிப்பதற்கான மாணவர்களிடம் பேட்டி பற்றிய விழிப்புணர்வு கூட்டம் 05.07.2019 அன்று நடத்துவதற்கு தேவையான மேடை அலங்காரம், தரை விரிப்பான், விளம்பர பலகை , டேபிள் சேர், LEd புராஜெக்டர் மற்றும் ஜெனரேட்டர் ஆகியவற்றை வாடைக அடிப்படையில் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.65,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டின் விலையை விட 0.03 சதவீதம் குறைவான விலைவீதத்தில், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் திரு.M. பொன்னுசாமி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு** :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ7/6012/2019(மையம்)**

**தீர்மானம் எண்.492 (பொருள்– 8) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பிறப்பு, இறப்பு சம்மந்தமான பதிவுகளை கணினி மயமாக்க ஏதுவாக பதிவிறக்கம் செய்யவும், இம்மாநகராட்சிக்கு பிற்காலத்தில் தேவைப்படும் ஆவணங்கள், நீதிமன்ற வழக்குகள், வரிவிதிப்பு தொடர்பான ஆவணங்கள், உள்ளிட்டவைகளை மைய மற்றும் வார்டு அலுவலகங்களில் பதிவேற்றம் செய்து கொள்ள தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை அமர்த்திட, மதிப்பீடு ரூ.21.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**21.10** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை **2019–20**ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் **(2101009)** தலைப்பின் கீழ் செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/7903/2019/(மையம்)**

**தீர்மானம் எண்.493 (பொருள்– 9) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணியினை திரு.சி.பட்டாபிராமன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | வார்டு எண் 3க்குட்பட்ட ரயில்வே பாலம் முதல் நெல்சன் ரோடு வரை உள்ள சம்பா வாய்க்கால் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டும் பணி **மதிப்பீடு ரூ.66.00 லட்சம்** இ3/1381/14 | திரு.சி.பட்டாபி ராமன், திருச்சி | 23.01.15 (SD) 4% | 54838.00 | VII | 47 | 654 |
| | | | 13.05.15 (SD) 4% | 148949.00 | VIII | 10 | 18 |
| | | | 30.11.16 (SD) 4% | 52377.00 | - | – | – |
| | **மொத்தம்** | | | **256164.00** | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிக்கு செலுத்தியுள்ள காப்புத் தொகை ரூ.**2,56,164/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.சி.பட்டாபி ராமன், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு செலுத்தியுள்ள காப்புத் தொகை ரூ.**2,56,164/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/1381/14(மையம் )**

**தீர்மானம் எண்.494 (பொருள்– 10) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மையஅலுவலகம் மற்றும் கோட்ட அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணம் ஒருவருக்கு ஏற்கனவே ரூ.**5,000**/-வீதம் வழங்கப்பட்டு மாதம் ஊதியத்திலிருந்து ரூ.**500**/- வீதம் **10** மாதத்திற்கு பிடித்தம் செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில் அரசு ஆணை எண்.**240** (சம்பளம்) நிதித் துறை, நாள்.**02.08.2019**ல் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பண்டிகை கால முன்பணம் ரூ.**5,000**/- ரூபாயிலிருந்து ரூ.**10,000**/- ரூபாயாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் அனைத்து பணியாளர்களுக்கும் பண்டிகை கால முன்பணம் ரூ.**10,000**/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கலாம். இத்தொகையினை மாதாந்திர சம்பளத்திலிருந்து ரூ.**1,000**/- வீதம் **10** மாதங்கள் பிடித்தம் செய்யலாம்.

எனவே, மாநகராட்சி பணியாளர்களுக்கு பண்டிகை கால முன்பணம் ரூ.**10,000**/- வீதம் **2000** x 10000= 2,00,00,000/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட தனி அலுவலர் அவர்களின் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண்.பி2/8295 /2019 (மையம்)**

**தீர்மானம் எண்.495 (பொருள்– 11) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், திருச்சிராப்பள்ளி அவர்களின் **20.03.2019** ஆம் தேதிய கடிதத்தில் கடந்த **2018** ஆம் ஆண்டு **5981** காய்ச்சல் கண்ட நபர்களில் **129** நபர்களுக்கு டெங்கு நோய் உறுதிபடுத்தப்பட்டதாலும், தற்போது **2019** ஆம் ஆண்டு **862** காய்ச்சல் கண்ட நபர்களில் **21** நபர்களுக்கு டெங்கு நோய் உறுதிபடுத்தப்பட்டதாலும், இம்மாநகராட்சிக்குட்பட்ட **65** வார்டுகளிலும் டெங்கு கொசு புழு வளர ஏதுவான ஆதார நிலைகளை கண்டறிந்து, அழிக்க போதுமான பணியாளர்களை நியமிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சி அனைத்து கோட்ட துப்புரவு ஆய்வர்/துப்புரவு அலுவலர் ஆகியோர்களின் அறிக்கையில் ஸ்ரீரங்கம் கோட்டத்திற்கு **198** டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களும், பொன்மலை கோட்டத்திற்கு **231** டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களும் மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்கு **238** டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களும் என மொத்தம் **865** டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் தேவைப்படுவதாக தெரிவித்துள்ளனர். இருப்பினும் தற்போது டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் இருப்பதால், ஒரு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு **20** டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் வீதல் **18** நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு **360** டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை **60** நாட்களுக்கு டெங்கு கொசு புழு ஒழிப்பு பணிக்கு ஈடுபடுத்தலாம்.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறைகள் ஆர்சி.ஜெ3/7525/2018 நாள் 23.10.2018 இன் படி செயல்திறனற்ற பணியாளர்களுக்கு (Unskilled Labours) நாள் ஒன்றுக்கு 300 என நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி 360 பணியாளர்களை சுய உதவிக் குழுக்கள் மூலம் 60 நாட்களுக்கு டெங்கு கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ரூ.300/– என்ற அடிப்படை ஊதியத்துடன் EPF Rs.39, ESI Rs.12 உட்பட ரூ.75,81,600/– செலவினம் மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு 360 பணியாளர்களை 60 நாட்களுக்கு ஈடுபடுத்தவும், அதற்காக ஆகும் செலவினம் ரூ.75,81,600/–க்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி செலவினம் ரூ.75,81,600/–க்கு அனுமதி வழங்கலாம்.
2. நோய் தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி இப்பணிக்காகும் செலவீனத்தினை கணக்கு தலைப்பு எண் 2106 வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்.எச்4/4390/2019 (மையம்)**

**தீர்மானம் எண்.496 (பொருள்– 12) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 13**

இம்மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம் எண்– 1 ஆண்டவர் ஆசிரமம் – ஸ்ரீரங்கத்தில் அமைக்கப்பட்டு மதிப்பீடு ரூ.6.60 இலட்சத்திற்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண் 1014 நாள்03.03.2016 ல் ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்த புள்ளிகள் 16.06.2016ல் பெறப்பட்டு தனியார் ஒப்பந்த நிறுவனமான மெசர்ஸ் A.S பவர் சொலுசன்– திருச்சி–5 நிறுவனம் வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண் 153 நாள் 30.06.2 016 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் 01.07.2016 முதல் மேற்கண்ட நிறுவனம் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம் எண்–1 ன் இயக்கி பராமரிப்பு செய்யும் பணியை சீராக நல்ல முறையில் மேற்கொண்டு வந்த நிலையில் 30.06.2019 உடன் நிறைவடைய உள்ளது.

எனவே பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கிடும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நீரேற்று நிலையத்தை 01.07.2019 முதல் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு புதிய கோப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நிலையில் உள்ளது. ஒப்பந்த புள்ளி கோரி இறுதி செய்ய கால தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் தற்போது இயக்கி பராமரிப்பு செய்துவரும் A.S பவர் சொலுசன்– திருச்சி–5 நிறுவனத்திடம் மேலும் இயக்கி பராமரித்திட இயலுமா என கேட்டுக்கொண்டதில் அந்நிறுவனம் தனது 10.06.2019 தேதிய கடிதத்தில் அதே விலை விகிதத்தில் இப்பணியினை மேற்கொள்ள ஒப்புதல்கடிதம் வழங்கியுள்ளது. அதனை ஏற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும்வரை ஒரு மாதம் மட்டும் இயக்கி பராமரிப்பு செய்யும் பணியை மேற்கொள்ளவும் ,அதற்கான மாதாந்திர பராமரிப்பு கட்டணம் ரூ.65,098 /– ஐ வழங்கிடவும் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாகஅனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1 மேற்கண்ட இயக்கி பராமரிப்பு செய்யும் பணியினை மெசர்ர்ஸ் A.S பவர் சொலுசன்– திருச்சி–5 நிறுவனம் மூலம் ஒப்பந்த புள்ளிகோரி இறுதி செய்து பணி உத்தரவு வழங்கும் வரை ஒரு மாதம் மட்டும் அனுமதிக்கலாம்.

2 இப்பணிக்கு ஆகும் மாதாந்திர பராமரிப்பு கட்டணம் ரூ.65,098/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.

3 மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை 2019–20 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் கணக்கு தலைப்பு எண்

2305009 கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.450.00 இலட்சத்தில் இருந்து ஒதுக்கீடுசெய்து கொள்ளலாம்.

**இ4/1399/2016/(மையம்)**

**தீர்மானம் எண்.497 (பொருள்– 13) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 14**

இம்மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம் எண்– 2 ஆண்டவர் ஆசிரமம் – ஸ்ரீரங்கத்தில் அமைக்கப்பட்டு மதிப்பீடு ரூ.6.60 இலட்சத்திற்கு ஆணையர் அவர்களின் நிர்வாகஅனுமதி எண் 1013 நாள்03.03.2016 ல் ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தபுள்ளிகள் 16.06.2016ல் பெறப்பட்டு தனியார் ஒப்பந்த நிறுவனமான மெசர்ஸ் A.S பவர் சொலுசன்– திருச்சி–5 நிறுவனம் வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண் 153 நாள் 30.06.2016ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் 01.07.2016 முதல் மேற்கண்ட நிறுவனம் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம் எண்–2ன் இயக்கி பராமரிப்பு செய்யும் பணியை சீராக நல்லமுறையில் மேற்கொண்டு வந்தநிலையில் 30.06.2019 உடன் நிறைவடையஉள்ளது.

எனவே பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கிடும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நீரேற்று நிலையத்தை 01.07.2019 முதல் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு புதியகோப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு புதியஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நிலையில் உள்ளது. ஒப்பந்தபுள்ளி கோரி இறுதி செய்ய காலதாமதம் ஏற்படவாய்ப்புள்ளதால் தற்போது இயக்கி பராமரிப்பு செய்துவரும் A.S பவர் சொலுசன்– திருச்சி–5 நிறுவனத்திடம் மேலும் இயக்கி பராமரித்திட இயலுமா என கேட்டுக்கொண்டதில் அந்நிறுவனம் தனது 10.06.2019 தேதிய கடிதத்தில் அதேவிலை விகிதத்தில் இப்பணியினை மேற்கொள்ள ஒப்புதல்கடிதம் வழங்கியுள்ளது. அதனை ஏற்று ஒப்பந்தப்புள்ளிகோரி பணிஉத்தரவு வழங்கும் வரை ஒரு மாதம் மட்டும் இயக்கி பராமரிப்பு செய்யும் பணியை மேற்கொள்ளவும் ,அதற்கான மாதாந்திர பராமரிப்பு கட்டணம் ரூ.65,098/– ஐ வழங்கிடவும் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாகஅனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1 மேற்கண்ட இயக்கி பராமரிப்பு செய்யும் பணியினை மெசர்ர்ஸ் A.S பவர் சொலுசன்– திருச்சி–5 நிறுவனம் மூலம் ஒப்பந்த புள்ளிகோரி இறுதி செய்து பணி உத்தரவு வழங்கும் வரை ஒரு மாதம் மட்டும் அனுமதிக்கலாம்.

2 இப்பணிக்கு ஆகும் மாதாந்திர பராமரிப்பு கட்டணம் ரூ.65,098/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்

3 மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை 2019 – 20 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் கணக்கு தலைப்பு எண் 2305009 கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.450.00 இலட்சத்தில் இருந்து ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

**இ4/1400/2016 /(மையம்)**

**தீர்மானம் எண்.498 (பொருள்– 14) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 15**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி குடிநீர் விநியோகத்திற்காக கலெக்டர் வெல் 1 மற்றும் ஆளவந்தான் படித்துறை நீர் உந்து நிலையத்திலிருந்து 55 மற்றும் 7 எண்ணிக்கை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் குடிநீர் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நீரேற்று நிலைய சேகரிப்பு கிணற்றின் நீர் சேகரிக்கும் ஆரகுழாய்களில் (Radial Arm) பெருமளவு அடைப்பு ஏற்பட்டுள்ளதால், நீர் சேகரம் முழுவதுமாக இல்லாமல், சேகர கிணற்றில் குடிநீர் குறைவாக உள்ளது. மேற்படி சேகர கிணற்றின் ஆரக்குழாய்களை சுத்தம் செய்யும் பணிகளை

ரூ.22.30 இலட்சம் மதிப்பீட்டில் M/s A.S. Power Solutions, திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவான விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/9501/2019(மையம்)**

**தீர்மானம் எண்.499 (பொருள்– 15) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி குடிநீர் விநியோகத்திற்காக கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாக கொண்டு செயல்பட்டு வரும் Well 1 2 3 மற்றும் ஆளவந்தான் படித்துறை நீர் உந்து நிலையங்களின் சேகர கிணற்றில் அமைந்துள்ள பம்புகள், மோட்டார்கள் மற்றும் நீர் உந்து குழாய்கள் நீர் சேகரிப்பு கிணற்றில் சேகரம் ஆகும் குடிநீரில் உள்ள இரும்பு தாது மற்றும் பிற சேர்மங்களால் படிமாக படிந்துள்ளது இதனால் மேற்படி குடிநீர் உந்து நிலையங்களில் மோட்டார் பம்பிங் முழு சக்திக்கு குடிநீர் உந்தப்பட முடியாமல் உள்ளது. இதன் விளைவாக, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றிட இயலாத நிலையில் உள்ளதால், இதனை சரிசெய்திடவும் மற்றும் நீர் உந்து நிலைய மோட்டார் பம்புகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியினை ரூ.31.50 இலட்சத்தில் M/s A.S. Power Solutions, திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06% குறைவான விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/9473/2019(மையம்)**

**தீர்மானம் எண்.500 (பொருள்– 16) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**